# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 166/நகராட்சி/2018**

**நாள் : 15/11/2018**

**திரு M. ஆறுமுகநயினார்,**
**மைலாப்பூர், சென்னை – 600 004.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**சிதம்பரம் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, மயிலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை, எண்.2 என்ற முகவரியில் உள்ள கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி நிறுவனர் சார்பாக முறையீடு செய்யப்பட்ட 20.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 166/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக சிதம்பரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் முறையீட்டு நிறுவன அலுவலரின் ஒப்புதல் கடித வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, மயிலாப்பூர், வெங்கடேச அக்ரஹாரம் சாலை, எண்.2 என்ற முகவரியில் உள்ள கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி நிறுவனர் சார்பாக தாக்கல் செய்த முறையீட்டு மனுவில், கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சி சம்பந்தப்பட்ட ஒப்பந்த புள்ளி செய்தியினை தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ் ஒவ்வொன்றிலும் விளம்பரம் செய்தமைக்காக 26.07.2015 நாளிட்ட பற்றுச் சீட்டு (Invoice) எண். 152/2015–16–இல் ரூ. 23,720/– செலுத்துமாறு சிதம்பரம் நகராட்சியிடம் கோரப்பட்டதென்றும், 3 ஆண்டுகள் ஆகியும் அத்தொகை நகராட்சியால் செலுத்தப்படாததால் அத்தொகையினை செலுத்த ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் கோரிக்கை சம்பந்தமாக சிதம்பரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு விளம்பரம் செய்த வகையில் செலுத்தப்படவேண்டிய கட்டணத் தொகை 04.09.22018 நாளிட்ட சிட்டி யூனியன் வங்கியின் காசோலை எண்.000085 மூலம் ரூ.23,483/– செலுத்தப்பட்டுவிட்டது என்று

தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட விளம்பரக் கட்டணத் தொகையில், வருமான வரி பிடித்தம் போக ரூ. 23,483/– பெறப்பட்டதையும் கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி நிறுவன அலுவலர் உறுதி செய்துள்ளதுடன், இம்முறைமன்ற நடுவத்தின் நடவடிக்கைக்கு நன்றியையும் தெரிவித்துள்ளார். இந்நிலையில், விளம்பரக் கட்டண நிலுவை குறித்து மேற்குறிப்பிட்ட நிறுவன அலுவலரிடம் 06.12.2018 அன்று மேற்கொள்ளப்படவிருந்த விசாரணையை இரத்து செய்வதுடன் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, **நவம்பர்** திங்கள், **15**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு M. ஆறுமுகநயினார்,**
   **கிரீன்வேஸ் செய்தி மற்றும் விளம்பர நிறுவனம்,**
   **எண்.2, முதல்மாடி, வெங்கடேஸ்வரா அஹ்ரஹாரம் சாலை,**
   **மைலாப்பூர், சென்னை –4.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **சிதம்பரம் நகராட்சி,**
   **சிதம்பரம்.**
   **கன்னியாகுமரி மாவட்டம்.**

நகல் : முறைமன்ற நடுவரின் **நேர்முக எழுத்தர்**
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – **3**
**இ.கோ. / உதிரி**